## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை உள்ளூராட்சி நிறுவகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் உள்ளடங்கலாக 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, இலங்கை உள்ளூராட்சி நிறுவகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன்

அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்,

- நிறுவகம் தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- நிறுவகத்தின் வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

**1.5 நிதிக்கூற்றுக்கள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| தொடர்புடைய நியமத்துடன் இணங்காமை | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் 02** | | |
| ரூபா 522,436 தொகையான வட்டி வருமானம், செயற்பாட்டு செயற்பாடுகளிலிருந்து கிடைத்த தேறிய காசுப்பாய்ச்சல் கணக்கீடு செய்யும் போது அகற்றப்பட வேண்டிய உருப்படியாக இருந்த போதும் தொழிற்பாட்டு செயற்பாடு களிலிருந்து கிடைத்த பணம் காசுப் பாய்ச்சலிலிருந்து கழிக்கப்படாதிருந்ததுடன் ஆண்டில் நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்யப்பட்டுருந்த ரூபா 16,0000,000 தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களுடன் இணங்குவதுடன் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது நியமத்தின் பிரகாரம் சீராக்கங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக நிதிக் கூற்றுக்களினை தயாரிப்பதற்கு முகாமைத்துவம் கவனஞ் செலுத்த வேண்டும். |

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 09**

| | | |
|---|---|---|
| நியமத்தின் 15 ஆம் பந்தியின் பிரகாரம், இருப்பானது கிரயம் அல்லது தேறிய தேறக்கூடிய பெறுமதி இதில் எது குறைவோ அந்தப் பெறுமதியில் அறிக்கையிடப்படல் வேண்டும். இருப்பினும், ரூபா 1,517,202 தொகையான காலங்கடந்த வெளியீடுகளின் இருப்பு தேறிய தேறக்கூடிய பெறுமதியை கணிப்பிடாமல் கிரயத்தில் அறிக்கையிடப்பட்டிருந்தது. | சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களுடன் இணங்குவதுடன் இந்த வெளியீடுகளின் இருப்பு தொடர்பில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம், பௌதீக மெய்மையாய்வினூடாக இருப்புக்களினை கணிப்பிடுவதற்கு தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது | கணக்கீட்டு நியமங்களின் நியதிகளின் பிரகாரம் இருப்பினை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென தயாரிப்பதற்கு முகாமைத்துவம் கவனஞ் செலுத்த வேண்டும். |

**1.6 பெறவேண்டிய பணம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சேவையிலிருந்து நீக்கப்பட்ட மற்றும் இராஜினாமா செய்த 14 உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,272,582 ஆன கடன் மீதிகள் மற்றும் மமரணித்த உத்தியோகத்த ரொருவரிடமிருந்து அறவிடப் பட வேண்டிய ரூபா 805,860 ஆன கடன் மீதி தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. நிதி நிலைமைக் கூற்றின் உரிமையின் கீழ் குறிப்பிட்ட ரூபா 504,434,195 அரசு மூலதன மானியங்களின் கணக்கீட்டுடன் தொடர்புடைய கணக்கீட்டுக் கொள்கையொன்று இனங்காணப்பட்டிருக்காத அதேவேளை ரூபா 2,601,484 கூட்டுத்தொகையான மானியங்களுடன் தொடர்புடைய சொத்துக்களினை இனங்கண்டு காலக்கழிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களுடன் இணங்குகின்றோம். மானியங்களினை கணக்கிடுவதற்கு மற்றும் காலக்கழிவிற்கான கொள்கையொன்றை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிறுவகத்தினால் 2015 ஆம் ஆண்டின் போது அச்சிடப்பட்ட தினக் குறிப்பேடுகளுக்காக மாகாண சபைகள் உள்ளுராட்சி மன்றங்கள் அமைச்சிடமிருந்து கிடைக்க வேுண்டிய ரூபா 492,000 தொகை 2018 ஆம் ஆண்டில் கிடைத்திருக்கவில்லை. | பல சந்தர்ப்பங்களில் அமைச்சிற்கு தெரியப்படுத்தப்பட்ட போதும் இதுவரை அத்தொகை கிடைக்கவில்லை. | பெறவேண்டிய தொகையை அறவிடுவது தொடர்பாக முகாமைத்துவம் கவனஞ் செலுத்த வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | முறையான ஒழுக்காற்று பரிசோதனையில் குற்றவாளியக்கப்பட்ட காரணத்தினால் சேவையிலிருந்து பதவி விலக்கப்பட்ட சாரதியொருவரிடமிருந்து அறவிட தொகையை அறவிடாமல் பணிக்கொடை கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட காரணத்தினால் நிலுவையாக இருந்த ரூபா 175,596 தொகையில் எஞ்சிய ரூபா 160,596 தொகையை முறைப்படி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | குறித்த தொகை அறவிடுவதற்கு சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பணிக்கொடை கொடுப்பனவின் போது அறவிடப்பட வேண்டிய எனினும் அறவிடப்படாத தொகையை உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள்,விதிகள் மற்றும் பிரமாணங் களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 15.1(IX) ஆம் பிரிவு | உரிய திகதிகளில் வினைத்திறமை காண் பரீட்சைகளினை நடாத்தியிருக்காமை காரணமாக 35 உத்தியோகத்தர்களின் சேவையில் நிரந்தரமாக்கல் பதவியுயர்வுகள் என்பன முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | அங்கீகாரத்திற்காக தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப் படுகின்றது. | தாபன விதிக் கோவையில் குறிப்பிடப்பட்டவ ாறு உரிய திகதிகளில் வினைத்திறமை காண் பரீட்சைகளினை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் உத்தியோகத்தர் களினை சேவையில் நிரந்தரமாக்கல் மற்றும் பதவியுயர்வுகள் என்பன முறையாக வழங்கப்படல் வேண்டும். |
| (ஆ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9.3 (அ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் நோக்கங்களுக்கு முரணாக ரூபா 742,288 பெறுமதிக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த CCTV கெமரா முறைமை தொடர்பாக இரு தரப்பினருக்கு இடையே | பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9.3 (அ) தொடர்பாக கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக இரு தரப்பினருக்கு இடையே உடன்படிக்கை மேற்கொள்ளப்பட | பெறுகை வழிகாட்டல் கோவையின் நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | வேண்டுமென குறிப்பிட்ட அவதானிப்பினை ஏற்றுக் கொள்கின்றேன். மேலும் எதிர்காலத்தில் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது முறையான உடன்படிக்கையொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் தற்போது குறித்த வழங்குனர் நிறுவனம் உத்தரவாத சான்றிதழொன்றை வழங்கியுள்ளது. | |
| (இ) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4 ஆம் பிரிவு | செயல்நடவடிக்கைத் திட்டம் வருடாந்த பாதீட்டினை அடிப்படையாக கொண்டு முனனுரிமையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | இச்சிக்கல் முன்னைய கணக்காய்வு ஐய வினாவின் மூலமும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் 2020 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் செயல் நடவடிக்கைத் திட்டம் 2014/01 அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான நிறுவகத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 935,590 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,836,486 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 3,772,076 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு விசேட செயற்திட்ட வருமானம் ரூபா 7,808,191 ஆலும் சான்றிதழ் பத்திர வருமானம் ரூபா 3,075, 375 ஆல் குறைவடைந்தமை மற்றும் அதற்கு விகிதசமமாக குறைவடையாமை இதற்கான பிரதான காரணங்களாக இருந்தன.

## 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவினங்களின் போக்குப் பகுப்பாய்வு

(அ) விசேட செயற்திட்டங்களின் வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 7,808,191 ஆல் அதாவது 61.75 சதவீதத்தினால் குறைவடைந்து காணப்பட்டதுடன் பங்கேற்பு கட்டுப்பாட்டை மேம்படுத்துவதற்காக சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களினை வலுப்படுத்தல் செயற்திட்டம், ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உள்ளூராட்சி மன்றங்களுக்கு புதிய கணக்கீட்டு முறைமையொன்றை அறிமுகப்படுத்தும் செயற்திட்டம் மற்றம் மொடியுல்களைத் தயாரித்தலின் வருமானம் மீளாய்வாண்டின் போது குறைந்தமை இக்குறைபாட்டிற்கு காரணமாக இருந்தது. உறுதிப்படுத்தப்பட்ட பாடநெறி ரூபா 3,075,375 அல்லது 76.31 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

(ஆ) மனித வள அபிவிருத்தி செலவினம் ரூபா 5,229,908 அல்லது 25.07 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் தாபன மற்றும் நிர்வாகச் செலவினம் ரூபா 2,007,738 ஆல் அல்லது 5.55 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் மற்றும் விரைவுச் சொத்துக்கள் விகிதம் பின்வருமாறு.

| விகிதம் | ஆண்டு | |
|---|---|---|
| | 2019 | 2018 |
| நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் | 11 : 1 | 8 : 1 |
| விரைவு சொத்துக்கள் விகிதம் | 11 : 1 | 7 : 1 |

நிறுவகத்திற்கான அதிஉத்தம நடைமுறை மற்றும் விரைவுச் சொத்துக்கள் தேவைப்பாடு தொடர்பில் மதிப்பீடொன்றை நடாத்தியிருக்காமை காரணமாக நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் மற்றும் விரைவுச் சொத்துக்கள் விகிதம் என்பன உயர் பெறுமதியொன்றை பிரதிபலித்தது.

# 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தின் திரட்டிய பதவியணிக்கு முறையாக கடமை கையளிப்பு கடிதங்கள் வழங்கப்படாமல் இருந்ததுடன் பதவியணி மீள் அமைப்பு ஊடாக உருவான புதிய பதவிகளுக்கான பதவியணியினரை உள்ளீர்ப்பதற்கும் ஆட்சேர்ப்பு செய்வதற்குமான ஆட்சேர்ப்பு நடைமுறையை திருத்தம் செய்வதற்கு இவ்வறிக்கை திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுட்டிக்காட்டப்பட்ட விடயத்துடன் இணங்குவதுடன் 2019 பெப்ரவரி 25 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் சகல பதவியணிக்குரிய தொழில் விபரங்களை தயாரிப்பதற்கு தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் தற்போது இச் செயற்பாட்டில் | உரிய திருத்தங்கள் விரைவில் மேற் கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பெரும்பாலானவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இதுவரை அங்கீகரிக்கப்பட்ட சில பதவிகளில் திருத்தம் மற்றும் சரிப்படுத்தலுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே விடயத்துடன் ஆரம்ப அறிவுடன் கூடிய குழுவொன்று மூலம் குறித்த செயற்பாட்டை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | |

### 3.2 நிதிகளின் குறைப்பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது திறைசேரியினால் வழங்கப்பட்ட ரூபா 50,000,000 தொகையான மீண்டெழும் ஏற்பாடுகள் மற்றும் பயிற்சியளித்தல் செலவினம் உட்பட மூலதன ஏற்பாடுகளில் ரூபா 75,000,000 தொகையில் ரூபா 62,335,000 அல்லது 50 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிகளினைப் பெறுவதில் தாமதம் காரணமாக மூலதன செலவினங்கள் குறைவடைவதற்கும் வெற்றிடங்கள் காணப்பட்டமை மீண்டெழும் செலவினம் குறைவடைவதற்கு காரணமாக இருந்தது. | பயன்படுத்த முடியுமான அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படல் வேண்டும். |

### 3.3 செயற்திட்டத்தினை பூர்த்தி செய்யாம் கைவிடுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவகத்திற்கான 4 மாடிகளுடன் கூடிய கட்டிமொன்றை நிர்மாணிப்பதற்கு 2013 ஆம் ஆண்டில் கேள்வி கேள்வி கோரி ஒப்பந்தகாரரொருவர் தெரிவு செய்யப்பட்டு ரூபா 53,196,907 ஆன உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் கட்டிடத்தின் அத்திவாரம் நிர்மாணம் பிரதான ஒப்பந்தகாரரொருவரால் உப ஒப்பந்தகாரருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. இந்த 4 மாடிகளுடன் கூடிய கட்டிடத்தின் 04 மாடிகளுடன் கூடிய மாடிகளை 8 | நிதி அமைச்சின் பரிந்துரை பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. இக் கட்டிட நிர்மாணம் வெற்றியளிக்காமையால் அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் அமைச்சரவைக்கு 2017 திசெம்பர் மாதம் 19 ஆந் திகதி அப்போதிருந்த மாகாண சபைகள் மற்றும் | அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கான முறையாக செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| வரைவரை அதிகரிப்பதற்கு 2013 நவம்பர் 04 ஆந் திகதி நிறுவகத்தின் முகாமைத்துவ சபையால் தீர்மானித்து பிரதான ஒப்பந்தகாரருக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்தியிருந்த போதும் அது தொடர்பாக பிரதான ஒப்பந்தகாரரால் உப ஒப்பந்தகாரர் தெரியப்படுத்தாமை காரணமாக 04 மாடிகளுக்கு போதுமான வகையில் பைல் அத்திவாரம் இடப்பட்டிருந்தது. அத்தோடு இந்த அத்திவாரத்தின் மீது கட்டிடத்தை நிர்மாணிப்பது பொருத்தமற்றது என நிறுவகத்தினால் ஏற்றுக்கொண்டுள்ளதால் இதற்காக செலவிடப்பட்ட ரூபா 44,757,072 ஆன செலவினம் பயனற்ற செலவினமொன்றாக இருந்தது. | உள்ளூராட்சி மன்ற அமைச்சர் சமர்ப்பித்த நிர்மாண ஒப்பந்தம் மற்றும் மதியுரை ஒப்பந்தம் என்பவற்றை இரத்துச் செய்வதற்கு அமைச்சரவை தீர்மானம் கிடைத்திருந்தது.<br><br>எனினும் இதுவரை உடன்படிக்கை இரத்துச் செய்யப்படாருந்ததுடன் இந் நிறுவனத்தின் நிர்வாக சபை நியமிக்கப்பட்டவுடன் உடன்படிக்கையை இரத்துச் செய்வதற்கு எதிர்வரும் நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகின்றேன். | |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 சுற்றால் பிரச்சினைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கழிவு முகாமைத்துவம் உள்ளூராட்சி சபைகளின் பிரதான செயற்பாடொன்றாகக் காணப்படுகின்ற போதிலும், அது தொடர்பில் அவற்றுக்காக எவ்வித பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் அல்லது பயிற்சிப் பட்டறைகளும் இலங்கை உள்ளூராட்சி நிறுவகத்தினால் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த ஆண்டின் போது நடாத்துவதற்கு கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | தேவையான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படல் வேண்டும். |

**4.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2030 நிகழ்ச்சிநிரல் தொடர்பில் இலங்கை உள்ளூராட்சி நிறுவகத்தினால் அறிந்திருக்காமையினால், அச்செயற்பாடுகள் தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் இலக்கை அடைந்துகொள்வதற்கான அடைவுகள் அடைவுகளினை அடைந்துகொள்வதனை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நிறுவகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |